**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

*******

2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6–ம் நாள் புதன்கிழமை

******

**இடைமனு எண்.3/2023 –ல் நிறைவேற்று மனு எண்.21/2021–ல்**
**அசல் வழக்கு எண். 184/2011**

1. ராஜகாந்தம் (இறந்தார்)
2. சிங்காரவேலு
3. சந்திரசேகர்
4. கோவிந்தராசு .....மனுதாரர்கள்/வாதிகள்

...எதிராக...

1. ஜொஹிர்லால் சௌத்தரி (இறந்தார்)
2. வி. ஆர். சேகர்
3.சொர்ணா ...... 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்

4. ஹேமத்குமார்
சுரேஷ்குமார் .... 4,5 எதிர்மனுதார்ரகள்/ இறந்த 1–ம் எதிர்மனுதாரர் வாரிசுகள்/ புதிய தரப்பினர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 02.12..2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்களும், முதல் எதிர்மனுதார் இறந்துள்ளார். 2. 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளனர். 5–ம் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

<u>உத்தரவு</u>

நிறைவேற்று மனுவினை திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–6, விதி–17–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் வாதி ஆவார். இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி ஜொஹிர்லால் சௌத்ரி நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும்போது இறந்து விட்டார். அவரது வாரிசுகளான 4, 5 எதிர்மனுதாரர்கள்/புதிய தரப்பினர்களை சேர்க்க இடை மனு ண்.2/2022 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 04.03.2023 அன்று அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நிறைவேற்று மனுவை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது. இல்லையென்றால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும், இம்மனுவினை திருத்தம் செய்வதினால் பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. எனவே நிறைவேற்று மனுவினை திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.**

மனுதாரர்களின் மனு சரியல்ல. சட்டப்படியும், நியாயப்படியும் நிலை நிற்க கூடியதல்ல. மனுனுவுக்கு ஆதவராக 2–ம் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் சரியல்ல. 5–ம் எதிர்மனுதாரர், இறந்த முதல் எதிர்மனுதாரரின் மகன் என்பது உண்மை. மனு சொத்திலோ, ஜொகரிலாலின் இதர சொத்திலோ 5–ம் எதிர்மனுதாரருக்கு எந்த பாத்தியமும் உரிமையும், வாரிசு பாத்தியமும் கிடையாது. இறந்த முதல் எதிர்மனுதாரருகம், அவர் மனைவி கஞ்சன் கணவரும் 06.03.2013 அன்று அவர்கள் சொத்துக்கள் அனைத்தையும் 4–ம் எதிர்மனுதாருக்கு சேரவேண்டும் என்ற அடிப்படையில் ஒருபதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார். முதல் எதிர்மனுதாரரும் அவர் மனைவியும்

இறந்துவிட்டபடியால் அவர்கள் சொத்துக்கு உயில் படி 4–ம் எதிர்மனுதாரர் உரிமையாளராகி விட்டார். எனவே 5–ம் எதிர்மனுதாரர் EP–க்கு ஒரு தேவையற்ற தரப்பினர் அவரை தரப்பினராக சேர்ததே தவறு. முதல் எதிர்மனுதாரர் சொத்துக்களுக்கும், 5–ம் எதிர்மனுதாரருக்கும் எந்த தொடர்பும் கிடையாது. 5–ம் எதிர்மனுதாரர் வாரிசாக வராத நிலையில் அவரை EP–யில் தரப்பினராக சேர்த்ததே தவறு. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதார்கள்/இறந்த 1–ம் எதிர்மனுதாரரின் வாரிகள் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் நிறைவேற்று மனுவானது அசல் வழக்கு எண்.184/2011 என்ற வழக்கில் வழங்கப்பட்ட டிக்கிரியில் உள்ள சொத்தை வாதி வசம் பிரதிவாதிகள் ஒப்படைக்க பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும்போதே இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி இறந்துவிட்டர். இறந்த 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை சேர்க்க அனுமதி கோரி மனு EA.2/2022 இந்நீதிமன்றத்தில் கடந்த 04.03.2023 அன்று அனுமதிக்கப்பட்டு அதன் விளைவாக வழக்குரை திருத்தப்பாடு செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் கோரும் திருத்ததினால் வழக்கின் தன்மையும், வழக்கு மூலத்திலும் எவ்விதமான மாறுதலும் ஏற்பட போவதில்லை. வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும், மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள்

அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/-T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |

(ஓம்/-T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.3/2023-ல்
நிறைவேற்று மனு எண்.21/2021-ல்
அசல் வழக்கு எண்.184/2011
நாள்.06.12.2023.